# மிக்ஜாம் புயல்: முதல்வரின் வேண்டுகோளை ஏற்று கட்சித் தலைவர்கள் - அரசு அதிகாரிகள் - தொழிலதிபர்கள் நிவாரண நிதி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமாத சம்பளத் தொகைக்கான காசோலையும் வழங்கினார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், புதுச்சேரி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.சிவா, வி.ஏ. கென்னடி, செந்தில், சம்பத், நாகதியாகராஜன், நாஜிம், முன்னாள் அமைச்சர் சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கோபால், கார்த்திகேயன், ஏ.கே.குமார், சக்திவேல், முகிலன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 11 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் ஜி.விஸ்வநாதன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1.25 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர்கள் சங்கர் விஸ்வநாதன், டாக்டர் சேகர் விஸ்வநாதன், டாக்டர் ஜி.வி. செல்வம் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இந்திய வனப் பணி சங்கத்தின் தலைவர் ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு இந்திய வனப் பணி சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார். உடன் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் சுப்ரத் மொஹபத்ரா, திருமதி ஆர்.காஞ்சனா, இ.பிரசாந்த் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.12.2023) தலைமைச் செயலகத்தில், போத்தீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.ரமேஷ் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

## பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?

### தூய்மைப் பணியாளருக்கு ஊக்கத்தொகை வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 13-**

**மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குப்பைகளை அகற்றிட களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், “பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

கண்ணுக்கு ஒரு இடர் என்றால் நொடிப்பொழுதில் காக்க வரும் கை போல, தலைநகர் சென்னையிலும், புறநகர் மாவட்டங்களிலும் மிக்ஜாம் புயல் பாதிப்பைப் போக்கக் களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு 4000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கினேன்.

பயன்தூக்கார் செய்த உதவிக்கு அன்பைவிடநன்றியேது?

இவ்வாறு அவர் தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு பங்கேற்பு!

## 119வது வட்டத்தில் புதிய நியாய விலைக்கடை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

### க.வே.மோகன் வேண்டுகோள்!

*சென்னை, டிச. 13-*

*திருவல்லிக்கேணி பகுதி 119 வது வட்டத்தில் இன்று (13.12.2023) மாலை 5 மணியளவில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சி.ஐ.டி. காலனியில் புதியதாக நியாய விலைக் கடை திறந்து வைக்கப்படுகிறது.*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், காட்டுக் கோயில் மக்களின் வேண்டுகேளின்படி அந்த நியாய விலைக் கடையை திறந்து வைக்கிறார்.*

*இதில், தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு (மாவட்டச் செயலாளர்) ஏ.ஆர்.பி. எம்.காமராஜ் ( பகுதிச் செயலாளர்) ஆர்.என்.துரை (மாவட்ட துணைச் செயலாளர்) வே.கமலாசெழியன் (மாமன்ற உறுப்பினர்) உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.*

*எனவே, பகுதி வட்டக் கழகத்தினர், நிர்வாகிகள் தவறாமல் வருகை தருமாறு வட்டச் செயலாளர் க.வே. மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.*

ரூ.41 லட்சம் லஞ்சம் வாங்கி கைதான

## அமலாக்கத்துறை அதிகாரிக்கு 2 நாள் போலீஸ் காவல்!

### திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி!

*மதுரை, டிச.13-*

*41 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கி கைதான அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியை 2 நாள் காவலில் எடுத்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.*

*மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்தில் பணியாற்றி வந்த அதிகாரி அங்கித் திவாரி, திண்டுக்கல் மருத்துவரிடம் வழக்கு ஒன்றில் இருந்து விடுவிப்பதாகக் கூறி, 2 தவணைகளாக 41 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றார். முதல் தவணையாக 20 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்ற அவர், 2வது தவணையாக 21 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கியபோது தமிழ்நாடு காவல்துறையின் லஞ்ச ஒழிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இதனை அடுத்து அங்கித் திவாரியை திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறையினர் பின்னர் சிறையில் அடைத்தனர். இந்நிலையில், நீதிமன்ற காவலில் சிறையில் இருந்த அங்கித் திவாரியை 2 நாள் காவலில் எடுத்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத்துறைக்கு திண்டுக்கல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.*

